# யுஎன்.எச்.ஸி.ஆர்.மீதுஇல.தமிழ் அகதிகள் சீற்றம்

(சென்னை) தமிழகத்திலிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப் படும் பெருமளவு அகதிகளும் அனுப்பப்படவிருக்கும் அகதிகளும் யு. என். எச். ஸி. ஆர் மீதுகடும் சீற்றம் கொண்டி (4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 68 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 6 இதழ் 186

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 22 8 1993

## தமிழீழ மாவட்ட நீதிமன்று நேற்று திறக்கப்பட்டது

(உடுவில்) தமிழீழத்தின் முதலாவது மாவட்ட நீதிமன்றம் நேற்றுக் காலை 10 மணிக்கு மருதனார் மடம்—மானிப்பாய் வீதியில் கோலாகலமாக திறந்துவைக் கப்பட்டது. (2-ம் பக்கம் பார்க்க)

## தமிழீழ நீதிமன்றில் பி. பி. ஸி. நிருபர்கள்

(யாழ்ப்பாணம்) தமிழீழத்தின் முதலாவது மாவட்ட நீதிமன்றம் நேற்றுக் காலை கல்லூரத்தில் திறக்கப் பட்டபோது இவ் வைபவத் (2-ம் பக்கம் பார்க்க)

( ● ஐ. நா. மாநாட்டில் பிரேரணை வாபஸ் )

# உள்நாட்டிலும்வெளிநாட்டிலும்

# இலங்கைமீதுகடும்கண்டனம்

## ஏமாற்று வேலையென சீற்றம்

(ஜெனிவா)

இலங்கையில் தமிழ் சிறுபான்மையினரை இலங்கை அரசு நடாத்தும் விதத்தை கடுமையாகக் கண்டித்து ஜெனிவாவில் ''ஐ. நா. உபகுழு'' முன் நேற்று முன்தினம் கொண்டு வரப்படவிருந்த கண்டனப்பிரேரணை இறுதிநேரத்தில் வாபஸ் பெறப்பட்டமை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பலத்த கண்டனத்தையும் அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது. (2ம் பக்கம் பார்க்க)

## மட்டு. மாவட்டத்தில் இராணுவ தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை தொடர்ந்து நடாத்தப்பட்டு வருவதாக இராணுவ பேச்சாளர் ஒருவர் நேற்று தெரிவித்தார்.

இத்தாக்குதலில் விஷேட அதிரடிப்படையினரும், இராணுவத்தினரும் பெருமளவில் தினமும் ஈடுபட்டு வருவதாகவும் அப்பேச்சாளர் தெரி (4-ம் பக்கம் பார்க்க)

## ஊழல், மோசடியில் பல அமைச்சர்கள்

(கொழும்பு)

அமைச்சர்கள் புரிந்த ஊழல்களை அரசாங்கம் விசாரிக்காமல் அதை மூடி மறைக்கப் பார்க்கின்றது என்று 'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது: லஞ்சம், ஊழல் சம்பந்தமாக விசாரணை செய்வதற்குச் சகல அதிகாரம் கொண்ட ஒரு ஆணைக்குழு நியமிக்கப் படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீபால டி ஸில்வா சமர்ப்பித்த பிரேரணையைத் தோற்கடிப்பதற்கு உப சபாநாயகர் காமினி பொன்சேகா தவிர்ந்த அரசாங்க அமைச்சர்கள் யாவரும் முனைந்து வருகின்றனர்.

இந்த அமைச்சர்கள் மீது குற்றம் சுமத்தி 'ராவய' பதி 4-ம் பக்கம் பார்க்க)

### சர்வதேச கருத்தை எதிர்கொள்ள

## இலங்கைக்கு துணிவேயில்லை

(கொழும்பு)

ஐ. நா. உபகுழுவில் கொண்டுவரப்படவிருந்த இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அரசு முன்னின்று வாபஸ் பெற்றதன்மூலம் சர்வதேச அபிப்பிராயத்தை எதிர் நோக்கும் துணிவு இலங்கை அரசுக்கு இல்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது.

இவ்வாறு அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் இதுகுறித்து தெரிவிக்கையில் கூறியுள்ளார். இது பற்றி லங்கா சமசமாஜக் கட்சியின் முக்கிய உறுப்பின (4-ம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. உபகுழு தீர்மானம் இறுதி நேரத்தில் வாபசானது

(ஜெனிவா)

இலங்கை இனப்பிரச்சினையில் ஐ. நா தலையிட வேண்டும் எனக்கோரும் முன்மொழிவை கடைசி நேரத்தில் ஐ. நா. சபையின் சிறுபான்மையின காப்புக்குழு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாததால் இலங்கை அரசு மிகப்பெரும் நெருக்கடியிலிருந்து தப்பித்துக் கொண்டது.

இத் தீர்மானத்தை முதலில் முன்மொழிந்த அமெரிக்கா, பெல்ஜியம், பிரான்ஸ், நோர்வேயைச் சேர்ந்த மனித உரிமை காப்பாளர்கள் நேற்று முன்தினம் இத் தலைகளமுன்மொழிவுப் பிரச்சினை வரும்போது இம் முன்மொழிவை வாபஸ் பெற்றுவிட்டனர்.

இதனால் எமது அபிலாசைகள் கொண்ட இம் முன்மொழிவு ( 4ம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சிவெடிவிபத்தில் 8 புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியில் நேற்று முன்தினம் எதிர்பாராதவிதமாக இடம்பெற்ற வெடிவிபத்தில் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த எட்டுப் போராளிகள் வீரச் சாவு அடைந்தனர்.

வண்ணன் (இராசரத்தினம் சற்குணநாதன், காக்கையன் குளம், இரணை இலுப்பைக் (4-ம் பக்கம்பார்க்க)

## லலித் கொலை விசாரணை: பல சிக்கல் எழுகிறது

(கொழும்பு)

லலித் அத்துலத் முதலி கொலையுண்ட சம்பவத்தை விசாரிக்க ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிசாரின் அறிக்கையில் காணப்பட்டுள்ள ஒவ்வாத கருத்துக்கள் மேலும் பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றது என்று நீதிமான்கள் கூறியதாக பி. பி. ஸி சந்தேசிய தெரிவித்தது.

லலித் அத்துலத் முதலி பாதுகாப்பு அமைச்சர் பதவி கேட்டுக் கொண்டதே இக்கொலைக்குக் காரணமாகலாம் என்று கூறிய தவறான செய்திகள் போன்று பல தகவல்கள்தான் ஸ்கொட்லன்ட்யார்ட் விசாரணையைத் திசை திருப்பியுள்ளது.

கொலையில் விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்டவர்கள் என்று கூறும் ஸ்கொட்லண்ட் (2-ம் பக்கம் பார்க்க

## அரசஊழியர்கப்பலில்செல்ல இறுதி நேரத்தில் அனுமதியில்லை!

### - ஏமாற்றத்துடன் திரும்பினர் -

(யாழ்ப்பாணம்)

நரோமா கப்பலில் பிரயாணம் செய்வதற்கு நேற்று பருத்தித்துறை துறைமுகத்திற்கு சென்ற நாற்பது அரச ஊழியர்களுக்கு கப்பலில் பிரயாணம் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டதையடுத்து அவர்கள் பயணத்தை தொடராது திரும்பியுள்ளனர்.

நரோமா கப்பலில் பயணம் செய்வதற்கு முறைப்படி விண்ணப்பித்து கடந்த 17ம் திகதி (4ம் பக்கம் பார்க்க)

### காரைநகரிலிருந்து

## கடும் ஷெல் தாக்கு

(வட்டுக்கோட்டை)

காரைநகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றும் நேற்று முன்தினமிரவும் வட்டுக்கோட்டை மூளாய், பொன்னாலை, சுழிபுரம் பகுதிகளைநோக்கி பாரிய ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இச் ஷெல்கள்மேற்படி பகுதிகளை அண்டிய கடற்கரையோரங்களில் விழுந்து வெடித்தன.

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ். வெளிவாரி B. A. part I பரீட்சைக்குரிய விடைக் குறிப்புகளும் பாட நூல்களும் (கூத்தன் பிரான் வெளியீடுகள்) கிடைக்கு மிடம்: மகிமிலன், யாழ்ப்பாணம்" ஸ்ரீசாந் நல்லூர். (ஏ-3361)

### புலோலியில் நீமியா உரம்

மண்வளம் பெருக்கிப் பயிர் பாதுகாப்பும் தருவது 'நீமியா உரம்' வேப்பம் பிண்ணாக்கை ஆதாரமாகக் கொண்டது. கிலோ பக்கற் ஒன்று ரூபா 18/- வடமராட்சியில் புலோலி சமநல சேவை நிலையத்தில் விற்பனையாகிறது. "மிகக் கைவற்" (ஏ-3362)

### தரன் ஸ்ருடியோ

அவசர பாஸ்போட் படங்கள், றபர் சீல், பேற் சீல், கலர் படங்கள், என்லாஜ் மென்ட் படங்கள், புளொக்ஸ், டிசைன்கள், விளம்பர பேனர், பிளாஸ்டிக் போட், பாடசாலை பாட்ஸ் மற்றும் ஓவிய வேலைகட்கு: 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (ஏ-3297)

### ஆண்டு-4 பரீட்சை

ஆண்டு 4 திறப் புலமைப் பரிசில் பரீட்சை (1994) மாதிரிப் பரீட்சை 22-08-93 ஞாயிறு மு. ப. 8-00, 11 மணி நேரங்களில் நடைபெறும். வகுப்புகள் மாணவரின் தரத்திற்கேற்ப செவ், வியா, சனி, ஞாயிறு நாட்களில் நடைபெறுகின்றன; குறிப்பிட்டளவு மாணவர் அனுமதிக்கப்படுவர். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (கி-413)

### (O/L) MATHS

G. C. E. (O/L)ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 26வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடைய கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி. (கி-418)

### சங்காபிஷேகம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அருள்மிகு ஞானவைரவர் ஆலய மணவாளக்கோலத் திருவிழாவும், அஷ்டோத்தர சங்காபிஷேகமும் எதிர்வரும் 29ம் திகதி நடைபெறும். -52

# 3 சகோதரிகள் தற்கொலை முயற்சி

## ஒருவர் மரணம்

(நெல்லியடி)

வறுமையின் கொடுமையினால் அலரி விதைகளை உட்கொண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரிகளுள் ஒருவர் மந்திகை மருத்துவ மனையில் மரணமானார்.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை காலை கரவெட்டி கிழக்கு கட்டுப்புலம் என்னும் இடத்தில் நிகழ்ந்துள்ளது.

செல்வி பிச்சையப்பா வதனி (வயது 25) என்னும் இளம் யுவதியே மரணமானவராவார். இவரின் சகோதரிகளான பிச்சையப்பா கலா (வயது 16) பிச்சையப்பா புஸ்பமாலா (வயது 12) ஆகியோர் ஆபத்தான நிலையில் மந்திகை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இம்மரணம் சம்பந்தமான விசாரணையை மேற்கொண்ட உடுப்பிட்டிப்பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. வி. நடராஜா தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். (160 - கி)

# பழனித் தேர்தல் பற்றி விரைவில் அறிவிக்கப்படும்

(சென்னை)

தமிழ்நாட்டின் பழனி மக்களவை, ராணிப் பேட்டை சட்டப் பேரவைத் தொகுதிகளின் இடைத்தேர்தலுக்கான திகதியை விரைவில் அறிவிப்பதாக மத்திய தேர்தல் ஆணையம் உயர் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது.

இந்த இரண்டு தொகுதிகளிலும் இம்மாதம் 19ம் திகதி நடைபெறுவதாக இருந்த தேர்தலை தேர்தல் ஆணையம் தள்ளிவைத்ததை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்த மனுவை தலைமை நீதிபதி எம். என். வெங்கடாசெல்லையா நீதிபதி பீ. பி ஜீவன் ரெட்டி ஆகியோர் கொண்ட டிவிஷன் பென்ச் விசாரித்தது.

இந்தத் தொகுதிகளில் தேர்தல்கள் நியாயமானவரையிலும் சுதந்திரமாகவும் நடைபெறுவதற்கு மத்திய அரசு 17 அணி துணை இராணுவப் படை மற்றும் இதர பாதுகாப்புப் படைகளை அனுப்பி வைக்கும் என சொலிஸிட்டர் ஜெனரல் உறுதியளித்திருப்பதையடுத்து தேர்தல் ஆணையம் இடைத்தேர்தலுக்கான திகதியை அறிவிக்கும் என்று நீதிபதிகள் நம்பிக்கை தெரிவித்தனர். (இ)

### விபத்தில் கால் முறிவு

(நெல்லியடி)

வீதியில் சென்ற ஆட்டோ மின் கம்பத்துடன் மோதியதால், சாரதி இடது கால் முறிந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் காலை 7-30 மணியளவில் பருத்தித்துறை விநாயகமுதலியார் வீதியில் இடம்பெற்றது. பருத்தித்துறை இறங்குதுறையில் பணிபுரியும் தே. பசுபதி தவராஜா (வயது 27) என்னும் இளைஞரே கால் முறிந்தவராவார். —160-கி

### பயிற்சி வகுப்பு

(கொழும்புத்துறை)

இடம்பெயர்ந்து உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள முகாம்களில் தங்கியுள்ள ஐம்பது யுவதிகளுக்கு தேசிய சர்வோதய இயக்கமான மருதனார் மடக்கிளையினர் இலவச தையல் பயிற்சி வகுப்பினை அண்மையில் ஆரம்பித்துள்ளனர் (154)

### நாளைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்திவரும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியில் நாளை விளையாட இருக்கும் கழகங்களின் விபரம்:

முதல் போட்டியில் ரேவல் கழகத்தை எதிர்த்து யுத்தசரம் கழகமும், 2-வது ஆட்டத்தில் பாடும் மீன் 'ஏ' பிரிவு கழகத்தை எதிர்த்து ரோவிட் ஸ்ரார் கழகமும் மோதுகின்றன. (வி-சி)

### தமிழீழ மாவட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க நீதி நிர்வாகத்துறை பொறுப்பாளர் திரு. பராதலைமையில் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த திரு. சு. ப தமிழ்ச்செல்வன் உத்தியோகபூர்வமாக நீதிமன்றத்தை திறந்துவைத்தார். தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் தமிழீழ தேசியக் கொடியை பாண்ட் வாத்தியங்கள் முழங்க ஏற்றிவைத்தார்

விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த அன்பு அம்மான் மங்களவிளக்கேற்றினார் தமிழீழ அரசியல்துறை யாழ்ப்பாண மாவட்டப் பொறுப்பாளர் திரு இ இளம்பரிதி, துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன், மூத்த உறுப்பினர் திரு. தேவர் அண்ணா, மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ஜனனி மற்றும் விடுதலை புலிகள் இயக்கப்பிரமுகர்களான திரு. யோகரத்தினம் யோகி, திரு. வே. பாலகுமாரன் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்.

மாவட்ட நீதிமன்றத் (வலிகாமம்) தின் நீதியரசர்களாக திரு. க. தேசியன். திரு. ச. பூவேந்தன். திரு. கி ஒப்பிலான் ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

தமிழீழத்தின் சட்டத்துறை நிபுணர்கள், சட்டத்தரணிகள் காவல் துறையினர், வைத்தியர்கள், சமய குருமார்கள், பெண் காவல் படையினர் உட்பட பொதுமக்கள் ஏராளமானோர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். நீதிமன்றம் திறந்து வைக்கப் பட்டதைத் தொடர்ந்து வழக்கு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. —109-கி

### தமிழீழ நீதிமன்றில்

(1ம்பக்கத் தொடர்ச்சி)

தில் இரு பி பி ஸி. நிருபர்கள் கலந்துகொண்டதும் ஒரு சிறப்பம்சமாகும். நீதிமன்ற திறப்பு நிகழ்ச்சியின் முழு நிகழ்வையும் இவர்கள் அவதானித்தனர்.

பி பி ஸி. யின் கொழும்பு நிருபர் சிவசக்தி நேரஸமும் மற்றொரு பி. பி ஸி. நிருபருமே இவ் வைபவத்தில் கலந்துகொண்டதுடன் இந்நிகழ்ச்சி பற்றிய விசேட செய்திகளையும் சேகரித்துள்ளனர்.

பி. பி, ஸி. நிருபர்களின் இவ்விஜயம் தமிழீழ நீதிமன்றம்பற்றி சர்வதேச நாடுகளுக்கு பல செய்திகளை எடுத்துரைக்குமென எதிர்பார்க்கப் படுகிறது. (சி

### திருமுறை முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

நாம் இன்றுள்ள துன்பம் நீங்க ஆலயங்கள் தோறும் மடலாலயங்கள் தோறும் திருமுறைகள் ஓதவேண்டும் என்று பக்திநெறிக் கழகத் தலைவர் பண்டித வித்துவான் திரு. ஆ. வி மகாலிங்கம் மீசாலை யாலையடிப் பிள்ளையார் கோவிலில் பன்னிரண்டாம் திருமுறை முற்றோதல் தொடக்கவைத்து பேசுகையில் கூறினார்

அதிபர் க. இராமலிங்கம் தலைமையில் முற்றோதல் நடைபெற்றது.

### பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோவிலின் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ வை. சபாரத்தினக்குருக்களின் சைவத்தமிழ் தொண்டினைப் பாராட்டி இணுவில் கோண்டாவில் காரைக்கால் சிவாலயத்தில் பொதுமக்களினால் அண்மையில் பாராட்டு விழா எடுக்கப்பட்டது. ம)

### லலித்

1 ம் பக்கத் தொடர்ச்சி)

யாரிடம் பொலிசார் அந்த அறிக்கையில் அதுபற்றி உறுதியான தகவல்களைத் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம-கி)

### ஐ. நா. மாநாட்டின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தீர்மானத்தில் இலங்கையில் தமிழ்மக்கள்மீது அரசு மேற்கொள்ளும் சகலவிதமான அடக்குமுறைகளையும், இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் விரிவாக குறிப்பிடப் பட்டிருந்தது. எனினும் இப் பிரேரணையை ஐ நா. உப குழு முன் சமர்ப்பிக்கவிருந்த நான்கு நாடுகளும் ஏன் இறுதி நேரத்தில் பின்வாங்கின என்பது பெரும் புதிராகவே உள்ளதாம்.

இப்பிரேரணையை வாபஸ் பெற வைத்ததை இலங்கை அரசு தனது வெளியுறவு இலாகா தூதுக்குழுவின் பெரும் வெற்றியாக கருதும் அதேவேளை இலங்கை எதிர்க்கட்சியினர், இச்செய்தியைப் பெருந் தோல்வி எனவும் சர்வதேச அரங்கின் முன்னாடும் ஒரு ஏமாற்றுவித்தை எனவும் கண்டித்துள்ளன

இதேபோன்றதொரு கண்டனக்கலையே சர்வதேச ரீதியிலும் எழுந்திருப்பதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது. —கி


## அறிவித்தல்

### வட இலங்கைச் சங்கீத சபை

### அறிமுறைத் தேர்வு-1993

தவிர்க்கமுடியாத காரணங்களால் பின்போடப் பட்ட மேற்படி தேர்வு 1993 - 09 - 04 (சனி) 1993-09-05 (ஞாயிறு) ஆகிய திகதிகளில் நடத்துவதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது, தேர்வு நாடிகளுக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட தேர்வு நிலையங்களில் 1993 - 05 - 15ந் திகதி நடைபெறவிருந்த பாடங்கள் 1993 - 09 - 04ந் திகதி சனிக்கிழமையும், 1993 - 05 - 16ந் திகதி நடைபெறவிருந்த பாடங்கள் 1993 - 09 - 05ந் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும் என்பதைத் தேர்வு நாடிகளுக்கு அறியத்தருகிறேன்.

இ. சுந்தரலிங்கம்.
யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளரும்,
வட இலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்.
(எ - 3312)



## தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் எலக்ரோனிக் துறையில் தொழில் வாய்ப்பு பெறக்கூடிய முறையில் பயிற்றுவிக்கப்படுகின்றன.

★ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்

சகல இன றேடியோ, ரெலிவிசன் வீடியோ டெக் தொழிற்படும் முறைகள் பழுதுகள் திருத்தப்படும் முறைகள் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்றுவிக்கப் படும்.

காலம்: 6 மாதம்

★ றீவைன்டிங்

டைனமோ, ரான்ஸ்போமர், மோட்டர் றீவைண்டிங் செய்தல் பயிற்றுவிக்கப்படும்.

காலம்: 5 மாதம்

★ மோட்ட சைக்கிள் மெக்கானிசம்

நீர் இறைக்கும் இயந்திரம், மோட்ட சைக்கிள் திருத்தப்படும் முறைகள் விளக்கமாக பயிற்றுவிக்கப்படும்.

காலம்: 4 மாதம்

பயிற்சிகள் ஆரம்பம்: 30-08-93 (கிழமை நாட்கள்)

விபரங்களுக்கு:

# JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(றெயில்வே கடவை அருகாமை மேல்மாடி)

(கி-3365)

மணிவாக்கு

''முதலில் தோன்றுவது போல சிறப்பாக முடிவில் எதுவுமே இருப்பதில்லை''

— ஜாக்|ஈலியட்

# நமது நோக்கு

## குதிரைக்கு முன் வண்டியா?

வடக்கிலும் கிழக்கிலும் பல பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் என அரசாங்கம் அறிவித்திருப்பதை கொழும்பில் உள்ள தமிழ்க்குழுக்களும் நிராகரித்திருப்பதாகச் செய்தி வந்துள்ளது.

அனைத்துலகையும் ஏமாற்ற அரசு கையாளும் யுத்தியே எனத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் எடுத்துத் தெரிவித்துள்ளனர்.

''ஒன்றுரைத் தேறேல்!'' இது ஔவையாரின் அனுபவமொழி; பகைவரை எளிதில் நம்பிவிடாதே என்பது அவரது ஆலோசனை.

எனவே அரசின் அறிவிப்பினை நாம் மிகுந்த கவனத்தோடு ஆலோசனைக்கு எடுக்கவேண்டும்.

அறிவிப்புக்குக் காரணம் இல்லாமல் இல்லை!

சர்வதேசப் பிரச்சனையாகிவிட்ட இனப்பிரச்சனைத் தீர்வுக்கு ஐ.நா.வின் தலையீடு பற்றி எங்கும் பேசப்படுகின்றது.

காரியம் நமது நாட்டு எல்லையை மீறிவிட்டது!

ஜெனிவாவில் ஐ.நா.வின் துணைக்குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டிருக்கின்றது. வாக்கெடுப்பின் முடிவு பிரதானமல்ல; சர்வதேச மட்டத்திற்குப் பிரச்சனை சென்றுள்ளது என்பதே முதல் வெற்றி!

வடக்குக் கிழக்கில் நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளது என்பதை உலகிற்குக் காட்ட, ஜனநாயகத் தேர்தல் என்ற மாய மந்திரம் ஒதப்பட்டிருக்கின்றது.

இது ஓர் கெட்டித்தனமான பிரசார உத்தி என அரசு தனது முதுகிலே தானே தட்டிக்கொள்ளலாம்!

சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம்; பலரைச் சிலகாலம் ஏமாற்றலாம்; ஆனால் எல்லோரையும் எல்லாக்காலமும் ஏமாற்ற முடியாது என்பதை அரசு இனியாவது உணர்ந்து கொள்வது அரசுக்கும் நல்லது; நாட்டின் எதிர்காலத்திற்கும் நல்லது!

தேர்தலுக்கு ஏற்ற உண்மையான சூழலை முதலில் ஏற்படுத்த வேண்டும். மக்கள் பாதுகாப்பாக, சுதந்திரமாக வாக்களிக்க முன்வர வேண்டும்.

முதலில் யுத்தத்தை நிறுத்தி, அமைதி நிலையை உருவாக்கி, மக்கள் மனதில் உள்ள பய உணர்ச்சியை விலக்கி வாக்களிக்க வாருங்கள் என அழைப்பது தான் அழகு.

சமாதானம் என்ற குதிரை வண்டிக் சரியாக ஓடவேண்டுமென்றால், குதிரையை வண்டிவிற்குப் பின் கட்டலாமா?

★ பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவிடம்

# சித்த மருத்துவத் துறையை

## தனிப்பீடமாக்க வலியுறுத்த வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக சித்த மருத்துவதுறையை தனிப்பீடமாக்கும் விதத்தில் மாணவர்கள், பல்கலைக் கழக நிர்வாகிகள் விரிவுரையாளர்களை கொண்ட உயர்மட்டக்குழு ஒன்று பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவை சந்தித்து இதனை வலியுறுத்தவேண்டுமென 'சித்த மருத்துவ மாணவர் மன்றம்' கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

யாழ் பல்கலைக் கழக பேரவை, மூதவை ஆகியன சித்த மருத்துவத்துறை தனி நிறுவகமாக மாற்றப்பட வேண்டும் எனச் சிபார்சு செய்ததையிட்டு எமக்கு இரு கருத்துக்கள் இல்லை. ஆயினும் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் ஐந்தாண்டுத் திட்டத்தில் (8.—89)ல் சித்த மருத்துவத்துறை தனிநிறுவகமாக மாற்றப்படவேண்டுமெனவும், விவசாயபீடம் அமைக்கப்படவேண்டும் எனவும் சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

1989—93 ஐந்தாண்டுத்திட்டத்திலும் மீண்டும் சித்த மருத்துவத்துறை நிறுவகமாக மாற்றப்பட வேண்டுமெனச் சிபார்சுசெய்யப்பட்டது. யாழ் பல்கலைக் கழகம் இதனைத் தொடர்ந்து வலியுறுத்தியிருந்தால் ஒன்பது வருடங்களாக கலைப்பீடத்தின்கீழ் நாங்கள் துறையாக இருந்த நிலையைத் தவிர்த்திருக்கலாம் கலைப் பீடம் சித்த மருத்துவத் துறைக்கு ஆற்றிய நன்மைகளை நாம் நெஞ்சிற் கொண்டுள்ளோம்.

யாழ் பல்கலைக் கழகம் துரிதமாக செயற்பட்டிருந்தால் இன்று தென்னிலங்கையில் உள்ள நிலையிலும் பார்க்க நாம் முன்னேற்றத்தைக் கண்டிருக்கலாம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## சான்றிதழ் வழங்கப்பட்டது

(உடுவில்)

அகில இலங்கை தேசிய சர்வோதய சிரமதான இயக்கத்தால் நடாத்தப்பட்ட தையல் பயிற்சி நெறியில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்களை சண்டிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. க. சந்திரராசா அவர்களின் வழங்கினார். (109)

## ஆண்டு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இன்பருட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 38வது ஆண்டு விழாவும் மாவீரர் ஞாபகார்த்தக் காண்டீபன் கழக விளையாட்டுப் போட்டியும் இன்பருட்டி காண்டீபன் அரங்கில் திரு. கே. சிவராசா தலைமையில் இரு நாட்கள் நடைபெற்றன.

இவ்விழாவில் தமிழீழ கடற்புலிகளின் விசேட தளபதி திரு. சூசை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். -52

## சித்திரப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

கல்வித் திணைக்களம் வடமராட்சிக் கல்விக் கோட்டமட்டத்தில் நடாத்திய சித்திரப் போட்டிகளில் கீழ்ப்பிரிவுப் போட்டியிலும் மேற்பிரிவுப் போட்டியிலும் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி முதலாம் இடங்களைப் பெற்றுள்ளது. மத்திய பிரிவுப் போட்டியில் முதலாம் இடத்தை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் பெற்றுள்ளது.

கீழ்ப்பிரிவு: இ. இராகவன் (பரு. ஹாட்லி) 2. யோ. சிவசேந்த பரு. வேலாயுதம் ம. வி. 3. சி. ஜெயமுகன் (உடுப்பிட்டி அ. மி. த. க.

மத்திய பிரிவு: ..சி. ஞானகாதீபன் (நெல்லியடி ம. ம. வி. 2. சி. ஜெகதீபன் (இமையாணன் அ.த.க. பா. 3. சி. செல்வரதன் பரு. சித்திவிநாயகர். வி.

மேற்பிரிவு: 1. கி. பிரணவன் பரு. ஹாட்லி 2. வி. அரவிந்தன் கரணவாய் பொன்னம்பல வி. 3. க. பாஸ்கரன் புலோலி மெ. மி. த. க. பா. (52)

## நிவாரண முத்திரை

(மானிப்பாய்)

நவாலி, ஆனைக்கோட்டை, மானிப்பாய் கிராம சேவையாளர் பிரிவுகளில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரண முத்திரைகள் தற்போது அவ்வப் பகுதி கிராம சேவகர்களினால் வழங்கப்படுகிறது. -71

## இராசிபலன்

22-08-1993

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு ஆவணி 06)

பஞ்சமி பி.ப. 1-58 வரை. சித்திரை பி. ப. 4-34 வரை. இராகு காலம் மாலை 4-35 முதல் 6-05 வரை. சுபநேரம் காலை 9-05 முதல் 10-35 வரை சித்தயோகம் ஷஷ்டி விரதம்.

மேஷம்: குடும்ப அமைதி, பணப்புழக்கம், தருமசிந்தனை.

இடபம்: தொழில் ஆதாயம், அதிஸ்டவாய்ப்பு, இறை வழிபாடு.

மிதுனம்: இறுசச்சரவு, மனச்சஞ்சலம், தொழில் குறைவு.

கடகம்: நிதானம் குன்றல் குடும்பசச்சரவு, வீண்பழி

சிங்கம்: தொழில் ஆதாயம், குடும்பசுகம், விருந்தினர் வருகை.

கன்னி: பணிமுடக்கம், கருத்துவேறுபாடு, பதட்டம்.

துலாம்: முதியோரால் ஆலோசனை காரியசித்தி, பாராட்டு.

விருச்சிகம்; கடும் உழைப்பு, மயக்கநிலை, அலைச்சல்.

தனுசு: அந்தஸ்து உயர்வு, மனைவி பெருமை, வாக்கு வன்மை

மகரம்: பெற்றோர் உதவி, தன்நம்பிக்கை, நண்பருதவி.

கும்பம்: வெளியார் தொல்லை, கடும்பேச்சு, குழப்பம்.

மீனம்: உறவில் விரிசல், ஏமாற்றம், மனச்சுமை.

ஜோஸ்யர்

## இன்று

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு இலகினித் தோட்ட முத்துக்குமாரசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

திருவிழா தொடர்ந்து 11 நாட்கள் நடைபெறும். 8-ம் திருவிழா வேட்டைத் திருவிழாவும், 9-ம் திருவிழா சப்பறத்திருவிழாவும், 10-ம் திருவிழா தேர், தீர்த்த திருவிழாவும், 11-ம் திருவிழா பூங்காவனத் திருவிழாவுடன் நிறைவு பெறுகின்றது. தினமும் சமயச் சொற்பொழிவு இடம் பெறும். (கி)

0 0 0

(மானிப்பாய்)

நவாலி அத்திரான் முருகமூர்த்தி கோவிலின் வருடாந்த உற்சவம் இன்று 22-ந் திகதி ஞாயிறு பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இதனைத் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் இவ்வைபவத்தில் எதிர்வரும் 29 ந் திகதி பெரிய சப்பர திருவிழாவும் 30-ம் திகதி ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (71-சி)

0 0 0

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வது) யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிராந்திய சபையின் பொதுச் சபைக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு பிராந்திய சபைத் தலைவர் திரு. செ. கந்தசாமி தலைமையில் ஊர்காவற்றுறைக் கொத்தணிப்பாடசாலை யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமுன்) நடைபெறும். 154)

## இளம் பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

குடும்ப கஷ்டங்கள் காரணமாக நச்சுத்திராவகத்தை அருந்திய இளம்பெண் ஒருவர் மரணமானார்.

ஏழாலை மேற்கைச் சேர்ந்த சொர்ணலிங்கம் புவனேஸ்வரி (வயது 38 என்பவரே இவ்வாறு மரணமானவராவார். (56-கி)

# அன்னை திரேசா

## உடல்நலன் பாதிப்பு

(சென்னை)

அன்னை திரேசா கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்பட்டு புதுடில்லியிலுள்ள அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

நேற்று முன்தினம் உப ஜனாதிபதியிடமிருந்து ராஜீவ் காந்தி விருதைப் பெறவிருந்த அன்னை திரேசா திடீரென உடல் நலன் குன்றியதால் அந்த வைபவத்தில் அவரால் கலந்துகொள்ள முடியாமல் போனது. (இ)

# நெருக்கடிகள் மத்தியிலும் ஒத்துழைப்புக் கிடைத்தது

— பரா உரை

(யாழ்ப்பாணம்)

பல நெருக்கடிகள் மத்தியிலும், நாம் தமிழீழத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் இவ்வேளையில் துணிச்சலுடன் எமக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ள உங்கள் அனைவரையும் நான் பாராட்டுகின்றேன்.

இவ்வாறு நீதிநிர்வாகத் துறை பொறுப்பாளர் திரு பரா யாழ். மாவட்ட வலிகாமப் பிரிவு சட்டத்தரணிகள் மத்தியில் பேசுகையில் கூறினார். மேற்படிப் பிரிவு சட்டத்தரணிகள் நேற்று முன்தினம் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்கள்

இவ்வைபவத்தில், அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. தமிழாலன், சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் திரு சுந்தரலிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள். (வி-சி)

அரசியல் அமைப்பில் திருத்தம்:

# பொதுமக்கள் கருத்துக்களை தெரிவுக்குழு கோருகிறது

(கொழும்பு)

இலங்கை அரசியல் அமைப்பில் திருத்தம் அல்லது மாற்றம் செய்வதற்கு பொது மக்களிடமிருந்து எழுத்து மூலமான கருத்துக்களை பெறுவதற்கு அரசியலமைப்பை திருத்தம் செய்வதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு முடிவு செய்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் 2-ம் திகதிக்கு முன்பு தங்கள் கருத்துக்களை பொது மக்கள் அறிவிக்கலாம் என்றும் அவசியமான பட்சத்தில் தெரிவுக் குழு விரும்பினால் பொது மக்களை நேரில் அழைத்து கருத்துக்களை அறிந்து கொள்ளலாம் என்றும் நாடாளுமன்ற தெரிவுக்குழு தெரிவித்துள்ளது. (ம-சி)

## கருத்தரங்கு

(ஏழாலை)

வலி-வடக்கு பிரதேச சனசமூக நிலையங்களின் சமாஜக் கருத்தரங்கு அண்மையில் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தில் சமாஜத் தலைவர் திரு. நா. போஷன் தலைமையில் நடைபெற்றது. (165)

## தாயினை நினைந்தெழு

ஒருதொழில் இல்லார் உயர்தொழில் பெறுவார்
ஒன்னவர் நண்பர்க ளாவார்
திருமண மாகா தவர்மணம் புரிவார்
திருவினை யறியவர் பெறுவார்
ஒருவரும் மாற்று நோயுடன் மாறும்
உலினொலிப் பெருக்குமுண் டாகும்
சகலரும் எல்லாம் தெல்லிபம் பதிசார்
தாயினை நினைந்தெழு தோழி.

— அன்னையின் அடியார்

(இன்று தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி அம்பாள் 4ம் நாள் உற்சவம்)

**பாலைவனத்தை சோலைவனமாக்கும் பசுமை நிறைந்த மரம் நடுவோம்**

★ தமிழீழ நீதிமன்றில் வாதிட

# சட்டத்தரணிகளை அமர்த்த ரூ. 150 செலுத்த வேண்டும்

(உடுவில்)

தமிழீழ நீதிமன்றம் மக்களுக்கு நீதிவழங்கும் இடமாக விளங்கும். சட்டத்தரணிகள் உண்மையாகவும், நீதிக்காகவும் வாதாடும் வகையில் சத்தியப்பிரமாணம் எடுத்துள்ளனர். குற்றம் சாட்டப்பட்டவர்கள் அவர்களாக வாதாடுவதற்குவழி செய்யப்பட்டுள்ளது.

தமிழீழத்தில் முதலாவது மாவட்ட நீதிமன்றத்தை ஆரம்பித்து வைத்தலை தொடர்ந்து நீதிநிர்வாகத் துறை பொறுப்பாளர் திரு. பரா பத்திரிகையாளர்களுக்கு இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது; ஸ்ரீலங்காவில் சட்டத்தரணிகளாகக் கடமையாற்றிய பல சட்டத்தரணிகளும் தனிப் பயிலு சட்டத்தரணிகளும்எமது அமைப்பின் கீழ் பயிற்சி பெற்ற சட்டத்தரணிகளும் நீதிமன்றத்தில் வாதாட அனுமதிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தென்னூறு வீதமான சட்டத்தரணிகள் எமது நீதிமன்ற சட்டத்தரணிகளாக சத்தியப்பிரமாணம் எடுத்துள்ளனர். எதிர்காலத்தில் தமிழீழத்தின் சட்டப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களே சட்டத்தரணிகளாக கடமையாற்ற அனுமதிக்கப்படுவர்.

சட்டத்தரணிகளை அமர்த்துவதற்கு ஒருநூற்றைம்பது ரூபா 150 செலுத்தவேண்டியிருக்கும் தனைப்பட்டவர்கள் தமக்காக தாமே வாதிடவும் முடியும். கஷ்டப்பட்டோருக்காக எமது சட்டத்தரணிகள் இலவசமாகவும் வாதிட வழிசெய்யப்பட்டுள்ளது.

இந்நீதிமன்றம் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் விசாரணைகளை மேற்கொள்ளும். மூன்று நாட்களும் காணிசம்பந்தமான விசாரணைகளும் (சிவில்) இரண்டுநாட்கள் குற்றவியல் விசாரணைகளும் (கிரிமினல்) மேற்கொள்ளப்படும் எனவும் திரு. பரா கூறினார். (109-சி)

# மூன்று தமிழர் மட்டக்களப்பில் கைது

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப்பகுதியிலுள்ளகண்டலடி என்னுமிடத்தை நேற்று முன்தினம் சுற்றிவளைத்த இராணுவத்தினர் இரு அப்பாவி மக்களை கைதுசெய்து அப்பகுதிமுகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

நாலு பிள்ளைகளின் தந்தையான 40 வயதுடைய எதிர்மன்னசிங்கம் மற்றும் தாய் தந்தையற்ற அநாதவரான யோகராஜா (22 வயது) ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்.

இதேவேளை வாகரையில் உள்ள 5-ம் வட்டாரத்தில் வீட்டிலிருந்த 3 பிள்ளைகளின் தந்தையான காளிக்குட்டி சதாசிவம் என்பவரை நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் ராணுவத்தினர்கைது செய்துள்ளனர். (சி-ஜி)

# அமெரிக்க விமானங்கள் ஈராக் மீது தாக்குதல்

(பாக்தாத்)

ஈராக்கின் வடபகுதியில் விமானம் பறக்கக்கூடாத பிரதேசத்தில் உள்ள விமான எதிர்ப்பு பீரங்கி நிலையத்தை அமெரிக்க யுத்த விமானங்கள் தாக்கியுள்ளன.

அமெரிக்க விமானங்கள் மீது இரண்டு ஏவுகணைகளை ஈராக் செலுத்தியதினால் அதற்கு பதில் நடவடிக்கையாக இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று வாஷிங்டன் அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் நான்கு யுத்த விமானங்கள் தாக்குதலை நடத்தின. மசூல் என்ற பட்டணத்துக்கு சமீபமாக உள்ள பீரங்கி தளத்தின்மீதே இந்தத் தாக்குதல் இடம் பெற்றது. —ம-கி

# முதல்விசாரணையில் இருவருக்கு அபராதம்

(உடுவில்)

தமிழீழ நீதித்துறைச் சட்டப் பிரமாணங்களுக்கு எதிராக அனுமதிப் பத்திரமின்றி கள்ளு வைத்திருந்தமைக் குற்றம் சாட்டி மானிப்பாய் நவாலியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மாணிக்கம் என்பவர் மீது தமிழீழத்தின் முதலாவது நீதிமன்றத்தில் முதன் முதலாக எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்கில் எதிரியான கணபதிப்பிள்ளை மாணிக்கம் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

தமிழீழ மாவட்ட நீதிமன்ற (வலிகாமம்) நீதியரசர்கள் திரு. க. தேசியன், திரு. ச. பூவேந்தன், திரு சி. ஒப்பிலான் ஆகியோர் தலைமையில் மேற்படி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரியான கணபதிப்பிள்ளை மாணிக்கம் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதியரசர்கள் தமிழீழ சட்டக்கோவை இல: 14 க்கு அமைய முந்நூறு ரூபா அபராதம் விதித்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆசீர்வாதம் அன்ரன் ஜோர்ஜ் என்பவர் மீதும் அனுமதியின்றி கள்ளு வைத்திருந்மைக்காக தொடரப்பட்ட வழக்கிலும் எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே அவருக்கும் இருநூறு ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அடுத்த நீதிமன்ற விசாரணைகள் ஆகஸ்ட் 23-ம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். (109-சி)

## படகுச்சேவை கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பூலோப்பளை பயணிகள் படகுச்சேவையில் ஈடுபட்டுள்ள சகல படகு உரிமையாளர்களையும், ஓட்டுநர்களையும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பூலோப்பளை பயணிகள் படகுத்துறைச் செயலகத்திற்கு தவறாது வருகை தரும்படியும் வரும்போது படகுச் சேவையில் பாவிக்கப்படும் வெளியிணைப்பு இயந்திரங்கள், மற்றும் சகல உபகரணங்களையும் கொண்டுவரும்படியும் கேட்கப்படுகின்றனர்.

ஊழியர் வேலை நிறுத்தத்தினால் ஆடைத் தொழிற்சாலை

# ஒன்றுக்குமூடுவிழா

(கொழும்பு)

தென்பகுதியில் நிவிற்றிகலையில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்று கடந்த 19-ந் திகதியிலிருந்து மூடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த யூலை மாதம் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்காததினால் 370 ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்ததினால் தான் ஆடைத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. —ம-கி

நிக்கரகுவாவின்

# உப-ஜனாதிபதி, எதிரணிகள் 50 பேர் கடத்தப்பட்டனர்

(மனகுவா)

நிக்கரகுவாவின் உப ஜனாதிபதி திரு. கிலோ கொடவும் பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 50 பேரும் தலைநகர் மனகுவாவில் இருந்து கடத்தப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் சன்டினிஸ்டா சார்புடைய இயக்கத்தால் கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சன்டினிஸ்டா சார்பு உடைய ஒருவர் கருத்து தெரிவிக்கையில்: "கொன்ரா கிளர்ச்சிக்காரர்களினால் கடத்தப்பட்ட 37 இராணுவ, அரசியல் அகதிகள் கடத்தப்பட்டதற்கு பதில் நடவடிக்கையே இது" என்று குறிப்பிட்டுள்ளார். (ம சி)

# 130 இலங்கைப் பெண்கள் ஸார்ஜா தீவிபத்தில் காயம்

(ஸார்ஜா)

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டின் ஸார்ஜாவில் நேற்று முன்தினம் இடம்பெற்றபெரும் தீவிபத்தொன்றில் இலங்கையைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான பெண்கள் படுகாயமடைந்துள்ளனர்.

பெயின்ற் தொழிற்சாலை ஒன்றில் இத்தீவிபத்து ஏற்பட்டது. இத்தீ அருகிலுள்ள கட்டிடங்களுக்கு பரவியது. இத்தீயை அணைக்க நேற்று அதிகாலை வரை போராடவேண்டியிருந்தது.

இத்தொழிற்சாலைக்கு அருகிலிருந்த ஆடைத் தயாரிப்பு தொழிற்சாலையில் இலங்கை பெண் தொழிலாளர் தங்கியிருக்கும் விடுதிக்கும் தீபரவியது. இதனால் பெரும்பாலும் நூற்றுக்கும் அதிகமான இலங்கைப் பெண்கள் (சுமார் 130) படுகாயமடைந்தனர்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இதுவரை இவ்வாறானதொரு தீவிபத்து ஏற்படவில்லையாம். —கி

### அரச ஊழியர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அரச ஊழியர் யாழ். செயலகத்தில் தங்கள் பெயர்களை பதிவு செய்திருந்தனர்.

இக்கப்பலில் பயணம் செய்வதற்காகப் பிரயாண ஆயத்தங்களுடன் பருத்தித்துறைத் துறைமுகத்திற்குச் சமூகமளிக்குமாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நேற்று அழைப்பு விடுத்திருந்தார்.

நேற்றுக்காலை 11 மணி தொடக்கம் பருத்தித்துறையில் காத்திருந்த இந்த ஊழியர்கள் 4-15 மணியளவில் கப்பல் கப்டனுடன் தொடர்பு கொண்டபோது கப்பலில் பயணம் செய்ய அனுமதியில்லை என்று தெரிவித்தாராம். அத்துடன் இதற்கான காரணம் எதனையும் அவர் தெரிவிக்கவில்லை.

இதனையடுத்து பருத்தித்துறை துறைமுகத்தில் நீண்ட நேரம் காத்திருந்த அரசஊழியர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்கள். (பி. கே. சி)

### தென்மராட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குளம்). அருள்வாசன் அல்லது முகிலன் (வேலுப்பிள்ளை செல்வக்குமார், விவேகானந்த நகர், கிளிநொச்சி), வள்ளுவன் (இராமசாமி சண்முகரட்ணம், 3-ம் கண்டம் முத்தையன்கட்டு), தமிழேந்தி அல்லது ராஜன் (ரகுநாதன் விநாயகமூர்த்தி, கொந்தக்காரன்குளம், வவுனியா), சகநாதன் அல்லது ரவிநாத் (ஆறுமுகம் ரங்கராஜ், அம்பாள் குளம், மாங்குளம்), விநாயகர் (வடிவேல் தியாகராசா, சேனைப்பிளவு, நெடுங்கேணி), வீரமணி (செல்லத்துரை பார்த்திபன், கீரிசுட்டான், நெடுங்கேணி), தவரஞ்சன் (பழனியப்பா செல்வகுமார், கோணாவில், கிளிநொச்சி) ஆகிய எட்டுப் போராளிகளுமே வீரச்சாவு அடைந்தவர்களாவர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். -பி-சி

### யு. என்: எச், ஸி. ஆர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருப்பதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படும் அகதிளின் தொகை எவ்வளவிற்கு அதிகரிக்க முடியுமோ அவ்வளவிற்கு அதிகரிப்பதன் மூலம் யு. என். எச். ஸி ஆர் அதிகாரிகளுக்கும் பெருமளவு பணம் சன்மானமாக வழங்கப்படுவதாகவும் பல அகதிகள்குற்றம் சாட்டியுள்ளனர்.

முகாம்களில் தங்கியுள்ள அகதிகளை நேரில் சென்று பார்வையிடவுள்ளதாகவும் அவர்களுள் குறைகளை நேரில் அறியப்போதாகவும் இக்குழுவினர் கூறியபோதும் இவர்கள் அவ்வாறு எதனையும் செய்யாது இந்திய அரசுக்கும் தமிழக அரசுக்கு துணைபோயுள்ளதாகவும் பல அகதிகள் கூறியுள்ளனர்.

தம்மை நேரில் அகதி முகாம்களில் வந்து சந்திப்பதாகக் கூறி ஏமாற்றிய யு. என். எச். சி. ஆர். அதிகாரிகளை அவர்களது அலுவலகங்களுக்கு நேரில் சென்று சந்தித்துத் தமது கோரிக்கைகளை வீசிய பல அகதிகளின் வினாக்களிற்கு அவர்களால் விடையேதும் கொடுக்கமுடியாது போய்விட்டதாகவும் பி. பி. ஸி. கூறியது. (சி)

### ஐ. நா. உபகுழு

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானமாகாமல் தட்டித்தது. இலங்கை வெளியுறவுத் துறையின் கடும் முயற்சியின் வெற்றியெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தீர்மானம் நிறைவேறியிருந்தால் இலங்கையின் மிகப்பெரும் நெருக்கடியை எதிர்நோக்க வேண்டியநிலை ஏற்பட்டிருக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### சர்வதேச

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரான திரு. பற்றி வீரக்கோன் கூறுகையில், இச்செய்கை இனப்பிரச்னை குறித்த இலங்கை அரசின் குறுகிய மனப்பான்மையைக் காட்டுகிறது. தற்போதைய அரசு இப்பிரச்னையை ஒடுக்க அரசியல் விடயங்களில் 'தொட்டாற் சுருங்கி' போல் நடந்துகொள்கிறது. இவ்விடயத்தில் அரசு முன்னின்று இப் பிரேரணையை வாபஸ் பெற்றிருக்கவேண்டிய அவசியமேயில்லை.

இலங்கை பிரச்னை இன்று வளர்ந்திருக்குமளவில் மற்றைய சர்வதேச நாடுகள் இலங்கையில் அமைதி ஏற்படச் செய்வதில் முயற்சிமேற்கொள்வது தவிர்க்கமுடியாது போய் விட்டது. மேலும் தமிழ்மக்களை எப்படியாவது நேரடியாக அணுகும் வழி வேண்டும் எனவும் கூறினர். —சி

### காரைநகரிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை காரைநகரில் உள்ள இராணுவ காவலரண்களை நோக்கி விடுதலைப்புலிகள் ஷெல்தாக்குதல்களை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (139)

### மட்டு மாவட்டத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

மட்டக்களப்பில் குறிப்பாக காட்டுப் பகுதியிலிருந்து விடுதலைப்புலிகளை வெளியேற்றும் நடவடிக்கையாகவே இத்தாக்குதல்கள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். —கி

### ஊழல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரிகையில் பல செய்திகள் வந்துள்ளபோதிலும் அரசாங்கம் இது பற்றி எந்த விசாரணையும் செய்ய முயலவில்லை.

ஜே. ஆர். ஆட்சிக் காலத்தில் இப்படி அமைச்சர்கள் மீது விசாரணை செய்ய ஆரம்பிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழு முன் 3,710 முறைப்பாடுகள் வந்தன. அரசாங்க அமைச்சர்கள் இணைக்களங்களுக்கு எதிராகவே இந்தக் குற்றங்கள் சுமத்தப்பட்டன. இதைக் கருத்தில் கொண்டு தான் காமினி பொன்சேகா அரசாங்கத்துக்கு எதிராகச் சில கருத்துக்களைக் கூறினார். -ம-கி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஜெயவர்த்தனசன், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 336/B